பிரதமர் மோடி, கெய்ரோ புறநகர் கிசாவில் அமைந்து, உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழ்கிற பிரமிடுகளை அந்த நாட்டின் பிரதமர் முஸ்தபா மட்புலியுடன் சென்று பார்வையிட்டார்.

மோடிக்கு 'ஆர்டர் ஆப் தி நைல்' விருது: எகிப்து அதிபர் வழங்கினார்

கெய்ரோ, ஜூன் 26– பிரதமர் மோடிக்கு எகிப்து நாட்டின் மிக உயரிய விருதான 'ஆர்டர் ஆப் தி நைல்' விருதை அதிபர் எல்சிசி வழங்கிக் கவுரவித்தார். இந்தியா – எகிப்து இடையே முக்கிய ஒப்பந்தங்கள் நேற்று கையெழுத்தானது.

பிரதமர் மோடி நேற்று முன்தினம் 2 நாள் அரசு முறைப்பயணமாக எகிப்து நாட்டுக்குச் சென்றார். 26 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர், எகிப்து நாட்டுக்கு சென்றது இதுவே முதல் முறை ஆகும்.

அங்குள்ள கெய்ரோ விமான நிலையத்துக்கு சென்று இறங்கிய பிரதமர் மோடியை ஒரு சிறப்பு நிகழ்வாக அந்த நாட்டின் பிரதமர் முஸ்தபா மட்புலி நேரில் வந்து வரவேற்றார். அங்கு பிரதமர் மோடிக்கு அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் பிரதமர் மோடி, நேற்று கெய்ரோவில் உள்ள எகிப்து அதிபர் மாளிகைக்கு சென்றார். அங்கு அவரை அதிபர் அப்தெல் பட்டா எல்சிசி உற்சாகமாக வரவேற்றார். அதைத் தொடர்ந்து இருவரும் மூடிய அறையில் சந்தித்துப் பேசினார்கள்.

இந்தச் சந்திப்பின்போது நடத்திய பேச்சுவார்த்தை மிகச்சிறப்பாக அமைந்ததாகவும், இரு தரப்பு உறவுகள் பற்றி விரிவான வகையில் ஆராயப்பட்டதாகவும், அத்துடன், இரு தரப்பு பொருளாதார, கலாசார தொடர்புகளை மேலும் வலுப்படுத்த இருவரும் ஒப்புக்கொண்டதாகவும் பிரதமர் மோடி தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு, இரு தரப்பு உறவினை பாதுகாப்பு கூட்டுறவுக்கு வழிவகுக்கும் நிலைக்கு உயர்த்தியதாக கெய்ரோவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கும், எகிப்துக்கும் இடையே பாதுகாப்பு துறை தொடர்பான கூட்டுக்கு உதவும் முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும், விவசாயம் மற்றும் அதன் சார்புடைய துறைகள், நினைவுச்சின்னங்கள் மற்றும் தொன்மையான இடங்களைப் பாதுகாத்தல், போட்டி சட்டம் தொடர்பாகவும் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

பிரதமர் மோடிக்கு எகிப்து நாட்டின் மிக உயரிய விருதான 'ஆர்டர் ஆப்

தி நைல்' விருதை அதிபர் எல்சிசி வழங்கிக் கவுரவித்தார். இந்த விருது, அந்த நாட்டில் 1915–ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். இது எகிப்து நாட்டுக்கு அல்லது மனித குலத்துக்கு மதிப்புக்குரிய சேவையாற்றுகிற நாடுகளின் ஜனாதிபதிகளுக்கும், பட்டத்து இளவரசர்களுக்கும், துணை அதிபர்களுக்கும் வழங்கக்கூடியதாகும்.

இந்த விருது, பிற நாடுகளில் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ள 13–வது விருது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த விருது, 3 சதுர தங்க அலகுகளைக் கொண்ட தூய தங்க காலர் ஆகும், அதில் 'பாரோனிக்' சின்னங்கள் உள்ளன. முதல் அலகு தீமைகளுக்கு எதிராக அரசைப் பாதுகாக்கும் எண்ணத்தையும், இரண்டாவது அலகு நைல் நதியால் ஏற்படுகிற செழிப்பு மற்றும் மகிழ்ச்சியையும், மூன்றாவது அலகு செல்வத்தையும் சகிப்புத்தன்மையையும் குறிக்கின்றன.

இந்த அலகுகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று 'டர்க்கைஸ்' மற்றும் மாணிக்கம் பதித்த வட்ட வடிவ மலரால் பிணைக்கப்பட்டுள்ளன.

காலரில் இருந்து தொங்குவது 'பாரோனிக்' பாணியின் பூக்கள் மற்றும் 'டர்க்கைஸ்' மற்றும் மாணிக்கக் கற்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு அறுகோண பதக்கமாகும். பதக்கத்தின் நடுவில், நைல் நதியைக் குறிக்கும் வகையில் நீண்டு நிற்கும் சின்னம் உள்ளது,

பிரதமர் மோடிக்கு கடந்த 9 ஆண்டுகளில் பப்புவா நியூகினியா, பிஜி, பாலாவ் குடியரசு, பூடான், அமெரிக்கா, பக்ரைன், மாலத்தீவுகள், ரஷியா, ஐக்கிய அரபு அமீரகம், பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து தற்போது எகிப்து நாடும் அந்த நாட்டின் உயரிய விருதை வழங்கி சிறப்பு சேர்த்துள்ளது.

பிரதமர் மோடியும், எகிப்து அதிபர் எல்சிசியும் நடத்திய இரு தரப்பு பேச்சுவார்த்தை தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் கவத்ரா கூறுகையில்,

"26 ஆண்டுகளில் இந்திய பிரதமர் எகிப்து வந்தது இதுவே முதல் முறை. பாதுகாப்பு கூட்டு உள்பட 4 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இரு தரப்பு பேச்சுவார்த்தையும், ஒப்பந்தங்களும் அரசியல், பாதுகாப்பில் ஒத்துழைப்பு, ராணுவ ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீட்டு உறவு, அறிவியல் மற்றும் கல்வி ஒத்துழைப்பு, மக்களுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்த உதவும்" என தெரிவித்தார்.

போர் நினைவிடத்தில் மரியாதை

பிரதமர் மோடி ஹெலியோபொலிஸ் காமன்வெல்த் போர் நினைவிடத்துக்கு சென்றார். அங்கு அவர், முதல் உலகப்போரின்போது, எகிப்திலும், பாலஸ்தீனத்திலும் தீரத்துடன் போரிட்டு வீரமரணம் அடைந்த இந்தியப் படைவீரர்கள் 3,799 பேர் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

கெய்ரோ நகரில் அமைக்கப்பட்டுள்ள 1000 ஆண்டு பழமையான அல் ஹக்கீம் மசூதிக்கு பிரதமர் மோடி சென்றார். இந்த மசூதி இந்தியாவைச் சேர்ந்த தாவூதிபோரா சமூகத்தினரால்தான் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 1012–ம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த மசூதியின் சுவர்களிலும், கதவுகளிலும் உள்ள நுணுக்கமான செதுக்கப்பட்ட கல்வெட்டுகளை பிரதமர் பாராட்டினார்

பிரதமர் மோடி, கெய்ரோ புறநகர் கிசாவில் அமைந்து, உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழ்கிற பிரமிடுகளை அந்த நாட்டின் பிரதமர் முஸ்தபா மட்புலியுடன் சென்று பார்வையிட்டார்.

குறிப்பாக, நைல் நதியின் மேற்குக்கரையில் பாறை பீட பூமியில் அமைக்கப்பட்டுள்ள 4–வது வம்சத்தின் 3 பிரமிடுகளைப் பார்த்து வியந்தார்.

போதைப்பொருள் விற்பனைக்கு உடந்தை: 18 போலீசார் "சஸ்பெண்ட்"

டி.ஜி.பி. சைலேந்திரபாபு பேட்டி

நாகர்கோவில், ஜூன் 26– போதைப்பொருள் விற்பனைக்கு உடந்தையாக இருந்த 18 போலீசார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர் என்று டி.ஜி.பி. சைலேந்திரபாபு கூறினார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய போலீஸ் நிலைய கட்டிடங்களை போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திரபாபு நேற்று திறந்து வைத்தார். பின்னர் நாகர்கோவில் ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற தோல்பாவை கூத்து, ஜிம்னாஸ்டிக் மற்றும் சுமார் 1,500 மாணவர்கள் பங்கேற்ற போதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அவர் பார்வையிட்டார். மேலும் குமரி, நெல்லை, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் போலீசாரால் கைப்பற்றப்பட்ட செல்போன், நகைகள், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை உரியவரிடம் ஒப்படைத்தார்.

பின்னர் நாகர்கோவில் ஆயுதப்படை முகாமில் டி.ஜி.பி. சைலேந்திரபாபு நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் போதை பொருள் இல்லை என்ற நிலை 282 போலீஸ் நிலையங்களில் ஏற்பட்டுள்ளது. போதை பொருள் விற்பனைக்கு உடந்தையாக இருந்த போலீஸ் துறையை சேர்ந்த 18 போலீசார், அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். 10 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். இதன் மூலம் போதை பொருள் நடமாட்டம் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது.

குமரி மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரை 30 கஞ்சா வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 85 பேர் கைதாகி உள்ளனர். அவர்களிடம் இருந்து ரூ.2 லட்சத்து 84 ஆயிரம் மதிப்புள்ள 14 கிலோ கஞ்சா, ரூ32 ஆயிரம் ரொக்கப்பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 32 இருசக்கர வாகனங்களும், 2 மூன்று சக்கர வாகனங்களும், 6 நான்கு சக்கர வாகனங்களும் பறிமுதல்

செய்யப்பட்டுள்ளது. தென் மண்டலத்தில் 1,211 கிலோ கஞ்சா இதுவரை அழிக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் குட்கா விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்டதாக 25 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 27 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ரூ.6 லட்சத்து 2 ஆயிரத்து 804 மதிப்புள்ள 603 கிலோ குட்கா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 4 இருசக்கர வாகனங்களும், 2 நான்கு சக்கர வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. நெல்லை சரகத்தில் இதுவரை 248 குட்கா வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 263 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ரூ.21 லட்சத்து 86 ஆயிரத்து 327 மதிப்புள்ள 3,164 கிலோ குட்கா மற்றும் புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

198 பேர் குண்டர் சட்டத்தில் கைது

குமரி மாவட்டத்தில் இந்த ஆண்டு கஞ்சா, புகையிலை போன்ற போதைப்பொருள்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 6 பேர் உள்பட மொத்தம் 30 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். நெல்லை சரகத்தில் இந்த ஆண்டு 6 மாதங்களில் 198 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். குமரி மாவட்டத்தில் பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய ரவுடிகள் 79 பேர் கைது செய்யப்பட்டு 16 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டனர். 552 பேரிடம் நன்னடத்தை பிணைப்பத்திரம் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு போலீஸ் துறையில் முதன் முறையாக பணியிடங்கள் காலியில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. 1 லட்சத்து 34 ஆயிரம் காவலர்கள், 15 ஆயிரம் ஊர்காவல் படை வீரர்கள் உள்ளனர். தமிழகத்தில் கடந்த 2021ம் ஆண்டு 10 ஆயிரம் காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். தற்போது 3,700 காவலர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதைப் போன்று அதிகாரிகளை பொறுத்த வரையில் ஆயிரம் பேருக்கு பணிநியமன ஆணை வழங்கினோம். அதன்பிறகு 444 உதவி ஆய்வாளர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். பெண்கள் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட காவலன் செயலி பெண்கள் மத்தியில் சரியாக போய் சேரவில்லை. இதனால் அதுதொடர்பாக தற்போது விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் நெல்லை சரக டி.ஐ.ஜி. பிரவேஷ்குமார், குமரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஹரிகிரண் பிரசாத் மற்றும் போலீஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

ஒரு மாதத்தில் மூன்றில் இரண்டு பங்கு 2,000 ரூபாய் நோட்டுகள் வங்கிக்கு திரும்பின

ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் தகவல்

மும்பை, ஜூன் 26– ஒரு மாதத்தில் மூன்றில் இரண்டு பங்கு 2,000 ரூபாய் நோட்டுகள் வங்கிக்கு திரும்பி விட்டதாக ரிசர்வ் வங்கி கவர்னர் சக்தி காந்ததாஸ் கூறினார்.

கடந்த 2016ம் ஆண்டு நவம்பர் 8ந் தேதி, 500, 1,000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, 2,000 ரூபாய் நோட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றை அச்சிடும் பணி, 2018–2019 நிதி ஆண்டிலேயே நிறுத்தப்பட்டது. அதனால், கடந்த மார்ச் 31ந் தேதி நிலவரப்படி, புழக்கத்தில் இருந்த நோட்டுகளில் 2,000 ரூபாய் நோட்டுகள், வெறும் 10.8 சதவீதமாக இருந்தன. அவற்றின் மதிப்பு ரூ.3 லட்சத்து 62 ஆயிரம் கோடி ஆகும்.

இதற்கிடையே, 2,000 ரூபாய் நோட்டுகள் வாபஸ் பெறப்படுவதாகவும், செப்டம்பர் 30ந் தேதிக்குள் அந்த

நோட்டுகளை வங்கியில் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம் என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்தது.

கடந்த 8ந் தேதி நிருபர்களுக்கு பேட்டி அளித்த ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ், 50 சதவீத 2,000 ரூபாய் நோட்டுகள் வங்கிக்கு திரும்பி விட்டதாக கூறினார்.

இந்நிலையில், நேற்று ஒரு செய்தி நிறுவனத்துக்கு சக்திகாந்த தாஸ் பேட்டி அளித்தார்.

அதில் அவர் கூறியதாவது:

கடந்த வார மத்தியில் இருந்த நிலவரப்படி, ரூ.2 லட்சத்து 41 ஆயிரம் கோடி மதிப்புள்ள 2,000 ரூபாய் நோட்டுகள் வங்கிக்கு திரும்பி விட்டன.

இவை மொத்த 2,000 ரூபாய் நோட்டுகளில், மூன்றில் இரண்டு பங்கை விட அதிகம். இவற்றில் 85 சதவீத நோட்டுகள் டெபாசிட்டாகவும், மற்றவை வேறு நோட்டுகளாக மாற்றிய வகையிலும் வந்துள்ளன. செப்டம்பர் 30ந் தேதி கடைசிநாள் என்பது கல்லில் எழுதப்பட்டது அல்ல. எனவே, பொதுமக்கள் பீதியடைந்து வங்கிக்கு படையெடுக்க வேண்டாம்.

நோட்டு வாபஸ் நடவடிக்கையால், நிதி ஸ்திரத்தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பொதுமக்களின் நுகர்வு அதிகரித்து, அவர்கள் அதிக செலவு செய்ய வேண்டி இருக்கும் என்று சில ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. ஆனால், பொருளாதாரம் மீது எதிர்மறை தாக்கம் எதுவும் ஏற்படாது.

இவ்வாறு அவர் கூறினார்.

பெயர் மாற்றம்

SHASHINI SATHIYAMOORTHY, பிறந்த தேதி: 19.12.2011, நெ. 15A, G–1, கே. கே. நகர் 1வது தெரு, கொளத்தூர், சென்னை– 600 099, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **POOJASRI SATHIYAMOORTHY**, என்று அழைக்கப்படுகிறார்.

Sathiyamoorthy, தந்தை

பெயர் மாற்றம்

RAFIULLAH ISMAIL, தந்தை பெயர்: Ismail, பிறந்த தேதி: 27.07.1970, நெ.80, திருக்கோவிலூர் ரோடு, சங்கராபுரம் அஞ்சல், விழுப்புரம் –606401, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **RAFFIC ISMAIL,** என்று அழைக்கப்படுகிறேன்.

RAFIULLAH ISMAIL

முதல் பிரதி நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை

எனது கட்சிக்காரர் M.வெங்கய்ய சௌத்ரி (த/பெ.M.பிரபாகரராவ்) அவர்களின் முகவரும், மாமனாருமான சென்னை–600 005, திருவல்லிக்கேணி, சைடோஜி லேன், எண்.10/21/2ல் வசிக்கும் காலம்சென்ற ரங்கையா என்பவரின் மகன் திரு. A. நாராயணமூர்த்தி, ஆதார் எண்.9479 1277 5293, வாக்காளர் அடையாள அட்டை எண்.TIK 0614867 என்பவரின் சார்பில், இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது என்னவெனில் 25.07.2007 தேதியிட்டு, கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3707/2007ஆக பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் மூலம் ஆண்டு அனுபவித்து வரும் அம்பத்தூர் வட்டம், நொளம்பூர் கிராமம், சர்வே எண்.309, 310ல் உள்ள 1,17,154 சதுர அடி உள்ள நிலத்தில் 541.சதுர அடி பிரிபடாத பாகத்தில், 990 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள Flat 4F2, "LOPERA", VGN LA PARISIENNE, அசையா சொத்தின் மேற்படி கிரையப் பத்திரத்தின் முதல் பிரதி ஆவணம் தொலைந்து விட்டது. யாரேனும் அதனைக் கண்டுபிடித்தால், எனது கைப்பேசி எண் 9444110958 அல்லது எனது கட்சிக்காரரின் முகவர் கைப்பேசி எண் 9444488040க்கோ அல்லது எனது விலாசத்துக்கோ அல்லது எனது கட்சிக்காரரின் முகவர் விலாசத்துக்கோ இன்றிலிருந்து 10 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். யாரேனும் மேற்கண்ட தொலைந்துபோன முதல் பிரதி ஆவணத்தை வைத்திருந்தாலோ அல்லது அதன் மூலம் ஏதேனும் வில்லங்கம் ஏற்படுத்தினாலோ, அது எனது கட்சிக்காரரையோ அல்லது அவரின் மேற்கூறிய அசையா சொத்தினையோ கட்டுப்படுத்தாது என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

K.S.துரைப்பாண்டி, வழக்கறிஞர், A3, அனுஷ்கா என்கிளேவ், 177, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை– 600 005, மொபைல்: 9444110958

பொது அறிவிப்பு

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், குருவாடி கிராமம், No.1/26 நடுத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் **பெருமாள் மகன் புண்ணியமூர்த்தி வயது:48 (ஆதார் எண்: 8881 1695 4099)** ஆகிய நான் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால், நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 22.06.2023ந் தேதி காலை 11.00 மணியளவில் எனது தந்தை பெருமாள் பெயரில் உள்ள **தா.பழூர் சார்பதிவாளர் அலுவலகத்தில்** பதிவு செய்யப்பட்ட **அசல் கிரைய பத்திரங்கள் (ஆவண எண். 399/1980, 70/1982)** மற்றும் **விக்கிரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில்** பதிவு செய்யப்பட்ட **அசல் கிரைய பத்திரங்கள் (ஆவண எண். 311/1988, 644/1984, 1001/1990, 188/1991, 164/1994)** ஆகிய பத்திரங்களை ஒரு பையில் எடுத்துக்கொண்டு எனது ஊரிலிருந்து கடலூர் மாவட்டம், வேப்பூர் என்ற ஊரில் உள்ள எனது உறவினரை பார்ப்பதற்காகவும். மேற்படி பத்திரம் சம்பந்தமாக கலந்து ஆலோசனை செய்வதற்காகவும், மேற்படி எனது ஊரில் இருந்து வேப்பூர் பேருந்து நிறுத்துமிடம் வந்து, பேருந்து நிறுத்துமிடத்திற்கு எதிரே உள்ள ஜெராக்ஸ் கடையில் மேற்படி ஆவணத்தை ஜெராக்ஸ் எடுத்துவிட்டு மேற்படி எனது உறவினரை பார்ப்பதற்காக வேப்பூர் பேருந்து நிறுத்துமிடத்தில் காத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனது பையில் வைத்திருந்த அசல் கிரைய பத்திரங்கள் காணாமல் போய்விட்டது. மேற்படி தொலைந்த பத்திரங்களை நான் பல இடங்களில் தேடியும் அங்கிருந்தவர்களிடம் விசாரித்தும் கிடைக்கவில்லை. எனவே மேற்படி பத்திரத்தை யாரேனும் கண்டெடுத்தால் உடனே கீழ்கண்ட முகவரிக்கு தொடர்புகொள்ளவும், மேலும் மேற்படி ஆவணத்தை யாரேனும் தவறான வழியில் பயன்படுத்தினால் அது என்னை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது எனவும் அறியவும்.

புண்ணியமூர்த்தி, த/பெ.பெருமாள், No.1/26 நடுத்தெரு, குருவாடி கிராமம் அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம்.

பொது அறிவிப்பு

Ref.No.12/2023 நாள்28.06.2023

எனது கட்சிக்காரர் சென்னை 600 002, அண்ணா சாலை, ஜோகன் முகமது தெரு, கதவு எண்.53ல் தற்காலிகமாக வசித்து வருபவரான திரு.அப்துல் அஜீஸ்கான் அவர்களின் மனைவி திருமதி.கைசர் ஜபீன் அவர்களின் சார்பாக கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்: தென் சென்னை மாவட்டம், பல்லாவரம் வட்டம். பொழிச்சலூர் கிராமம், சர்வே எண்.168/1,168/2ல் 3431 சதுரடி விஸ்தீரணம் கொண்ட சொத்தை எனது கட்சிக்காரர் திருமதி. J.R.கைசர்ஜபீன் அவர்களின் தந்தை கடந்த 23.05.1974 தேதி அன்று பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 1285/1974 எண்ணிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றார். எனது கட்சிக்காரரின் தந்தை திரு. ரஹமதுல்லாகான் கடந்த 24.11.2015 அன்று காலமானார். எனது கட்சிக்காரரின் தந்தைக்கு சொந்தமான மேற்சொன்ன சொத்தை அபிவிறுத்தி செய்வதாற்காக சட்ட கருத்து தேவை என்ற காரணத்தினால், கடந்த 18.11.2021 தேதி அன்று, சுமார் காலை 11.30 மணி அளவில் சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள என்னை சந்திக்க சொத்திற்குண்டான மேற்படி அசல் கிரைய ஆவணம் எண்.1285/1974, குத்தகை ஆவணகள் எண்.1359/1998, 1360/1998, அறக்கட்டளை ஆவண எண்.356/1986 எடுத்துக் கொண்டு அண்ணா சாலையிலிருந்து உயர்நீதிமன்றம் செல்வதற்கு, பேருந்தில் வந்து பிராட்வே பஸ் டிப்போவில் இறங்கியபோது, துணிபையில் இருந்த மேற்சொன்ன அசல் ஆவணங்கள் மற்றும் தஸ்தாவேஜுகளும் தொலைந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேற்படி தொலைந்த ஆவணங்கள் தேடியும் கிடைக்கவில்லை.

எனவே மேற்படி பத்திரங்களை யாரேனும் கண்டெடுத்தாலோ அல்லது யாரேனும் கைவசம் வைத்திருந்தாலோ தயவு செய்து கீழ்கண்ட எனது முகவரிக்கு ஒப்படைக்குமாறு இதன் மூலம் பொது மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

S.BABU, M.A., L.L.B., Advocate, 7/49, Bharath Street, Medavakkam, Chennai 600 100. Cell. 7299998008.

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் சென்னை 600 082, ஜவஹர் நகர், 1வது கிழக்கு பிரதான சாலை, லட்சுமி நகர், கதவு எண்.24 என்ற விலாசத்தில் வசிக்கும் திரு. E.உதயகுமார் அவர்களின் மனைவி சுமார் 43 வயதுள்ள திருமதி.U.கலாராணி தெரிவிப்பது யாதெனில் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தாலுக்கா, சீயாளம் கிராமத்தில் புஞ்சை சர்வே எண்.160/1க்கு விஸ்தீரணம் ஏ.0.15 செண்ட், புஞ்சை சர்வே எண்.160/2க்கு விஸ்தீரணம் ஏ.0.36 செண்ட், புஞ்சை சர்வே எண்.160/3க்கு விஸ்தீரணம் ஏ.0.04 செண்ட், புஞ்சை சர்வே எண்.152/4க்கு விஸ்தீரணம் ஏ.1.28 செண்ட், புஞ்சை சர்வே எண்.152,6க்கு விஸ்தீரணம் ஏ.0.96 செண்ட், புஞ்சை சர்வே எண்.164/2க்கு விஸ்தீரணம் ஏ.0.15 செண்ட், ஆக மொத்தம் ஏக்.2.94 செண்ட் கொண்ட நிலமும் மற்றும் சர்வே எண்.152/4ல் அடங்கிய கிணறு, மின் மோட்டார் மற்றும் மின இணைப்பு எண்.170க்குண்டான டெபாசிட் தொகை உள்படவும் கொண்ட சொத்தினை கடந்த 05.04.2010 அன்று எனது கட்சிக்காரர் திரு.A.சைமன்ராஜ் என்பவரிடமிருந்து சுத்த கிரையம் பெற்றார். மேற்படி கிரையப்பத்திரமானது கீழ்க்கொடுங்காலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரைய பத்திர எண்.482/2010 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி எனது கட்சிக்காரர் கடந்த 22.06.2023 அன்று காலை அண்ணாநகர் ரவுண்டானா அருகில் உள்ள பெங்குவின் ஜெராக்ஸ் கடைக்கு சென்று மேற்படி அசல் கிரைய பத்திரத்தினை ஜெராக்ஸ் எடுக்க செல்லும் போது மேற்படி அசல் கிரைய பத்திர எண்.482/2010 தொலைந்து போய்விட்டது. மேற்குறிப்பிட்ட அசல் ஆவணங்களை கண்டெடுத்தவர்கள் அதனை கீழ் கையொப்பமிட்டவரிடம் சமர்ப்பிக்கவும் அல்லது எனது கட்சிக்காரரிடம் சமர்ப்பிக்கவும், மேலும் மேற்படி சொத்து சம்மந்தமாக ஏதேனும் ஆட்சேபணை, மாற்று உரிமை கோரல் எவருக்கேனும் இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் கீழ்கையொப்பமிட்டவரிடம் அல்லது எனது கட்சிக்காரரிடம் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் தெரியப்படுத்திட வேண்டுகிறோம் அதற்கு பிறகு எழுப்பப்படும் கோரல்கள் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(K.உதயகுமார்), வழக்கறிஞர் நெ.227, 1வது தளம், புதிய கூடுதல் வழக்கறிஞர்கள் அறை பேஸ் III, உயர்நீதிமன்ற கட்டிட வளாகம், சென்னை 600 104 போன்: 9684064002

Redington

ரெடிங்டன் லிமிடெட்

(முன்னர் ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்)
CIN: L52599TN1961PLC028758
பிளாக் 3, பிளாத்தின், ரெடிங்டன் டவர், இன்னர் ரிங் ரோடு, சரஸ்வதி நகர் மேற்கு, 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600091.
Website: www.redingtongroup.com | Email: investors@redingtongroup.com | Phone no.: 044 42243353

காணொளி காட்சி அல்லது பிற ஒலி ஒளி சாதனங்கள் மூலம் இறுதி ஈவுத்தொகை மற்றும் பிற விஷயங்கள் குறித்து நடத்தப்படும் 30வது ஆண்டு பொதுக் கூட்டம் பற்றிய தகவல்

கம்பெனிகள் சட்டம், 2013 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் பொருந்தக்கூடிய விதிமுறைகளுடன், கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (MCA) டிசம்பர் 28 தேதியிட்ட பொது சுற்றறிக்கை 10/2022 மற்றும் செபி சுற்றறிக்கை எண். ஜனவரி 05, 2023 தேதியிட்ட SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 (இனிமேல் கூட்டாக "சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்டம் கூட்டுவதற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களை பரிவர்த்தனை செய்ய கம்பெனியின் 30வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) திங்கட்கிழமை, ஜூலை 31, 2023 அன்று காலை 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொளி காட்சி('VC)/பிற ஒலி ஒளி சாதனங்கள் ('OAVM') மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, உறுப்பினர்கள் கீழ்க்கண்டவற்றை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

1. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க, வருடாந்திரபொதுக் கூட்ட அறிவிப்பு உள்ளிட்ட 2022–23–ம் நிதி ஆண்டுக்கான ஆண்டறிக்கை ஆகியவை டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்)/கம்பெனி பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் (ஆர்டிஏ) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வடிவில் அனுப்பப்படும். மேற்கண்ட ஆவணங்கள் கம்பெனியின் வலைதளம் www.redingtongroup.com, பங்கு சந்தையின் வலைதளங்கள் அதாவது www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் NSDL's வலைதளம் www.evoting.nsdl.com ஆகியவற்றில் கிடைக்கும்.
2. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் ('அறிவிப்பு') குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களின் மீதான வாக்களிக்கும் உரிமைகள், கட்ஆப் தேதியான ஜூலை 21, 2023, வெள்ளிக்கிழமை அன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் உறுப்பினர்களின் பங்குகளின் விகிதத்தில் இருக்கும். அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்களுக்காகவும் அதன் உறுப்பினர்கள் அனைவருக்கும் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசத